# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,907—1970 මැයි 22 වැනි සිකුරාදා—1970.5.22

14,907 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 311 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 312 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 313 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. . | 316 |
| ஏற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 319 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 313 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. . | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 177

எண். டி. 250/ஆர்ஈசிரி/2.

### தரைப்படை — நிரந்தரப்படை — அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 சனவரி மாதம் 2 ஆம் திகதி தொடங்கி கப்ரின் (குவாட்டர்–மாஸ்ரர்) ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற் (குவாட்டர்–மாஸ்ரர்) ஷேர்ளி டக்லஸ் மாக்கஸ் டிரெக்ஸ், சி. ஈ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 11.

5—478

1970 இன் இல. 178

எண். டி/விஎவ்/2/எ (III)

### தரைப்படை—சி.வி.எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை அமர்வு துறத்தல்

தரைப்படையின் இலங்கை தொண்டர் படையின் கீழ்க்குறித்த அலுவலர் 1970, யூன் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் அரசாணை அமர்வு துறத்தலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

செக்கண்ட்–லெவ்ரினன்ற் எட்வின் ஆமின் வீரசிங்க, சீ.எல்.ஐ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 9.

5-446

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆம் திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 179

எண். டி/விஎவ்/17/எ(VI)

## தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் மாற்றுச் சேவை நியமனமும்

**நியமனம்**

1969, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் இலங்கை பயிலுநர் சிறப்பணியில் கீழ்க்காணும் கனவான் செக்கன்ட்—லெவ்ரினற் ஆகக் கடவர் :

திரு. ஷெல்ரன் குமாரசிறி த சில்வா ஹந்துன்னெத்தி.

**மாற்றுச் சேவை நியமனம்**

இலங்கை பயிலுநர் சிறப்பணியின் கீழ்க்காணும் அலுவலர், 1969, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் சிறப்பணியின் கனிட்ட பகுதிக்கு மாற்றுச் சேவையின் பொருட்டு நியமிக்கப்படுகிறார் :

செக்கன்ட்—லெவ்ரினன்ற் ஷெல்ரன் குமாரசிறி த சில்வா ஹந்துன்னெத்தி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 12.

5–526

---

1970 இன் இல. 180

எண். டி. 22/ஆர்ஈசிறி/173.

## இலங்கை அரச கடற்படை—நிரந்தர கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் இலங்கை அரச கடற்படையின் நிரந்தரப் படையிலிருந்து 1970 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகிறார்:

லெவ்ரினன்ற் (க. ஓ.) டி. டி. விக்கிரமநாயக, இலங்கை அரச கடற்படை.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 8.

5–444

---

1970 இன் இல. 181

எண். டி/விஎவ்/18/எ (IV)

## இலங்கை அரச கடற்படை—தொண்டர் கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணையமர்வு துறத்தல்

1970 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச கடற்படையின் தொண்டர் கடற்படையில் உள்ள கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர் அரசாணையமர்விலிருந்து விலகுதலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்:

சப்–லெவ்ரினன்ற் ஜீ. ஆர். மல்லவாரச்சி, இலங்கை அரச கடற்படையின் தொண்டர் கடற்படை.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 7.

5–443.

---

## அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 182

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளது:

ஏபி 12/69

1. உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரான திரு. ஏ. நவரத்தினம் அவர்கள் 5.1.1969 ம் திகதி தொடக்கம் இரண்டாந்தரப் பொலிசுக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏபி 25/70

2. சிறைச்சாலை உதவிக் கண்காணிப்பாளர் திரு. ஆர். ஜெ. என். யோடன் அவர்கள் 15.9.1969 ஆம் திகதி தொடக்கம் சிறைச்சாலைக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏபி 25/70

3. சிறைச்சாலை உதவிக் கண்காணிப்பாளர் சீ. எம். கொட்டலிங்கம் அவர்கள் 15.9.1969 ஆம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரை பதில் சிறைச்சாலைக் கண்காணிப்பாளரா நியமிக்கப் பட்டுள்ளார்.

ஏபி 56/68

4. முதலாம் வகுப்புக் கணக்குப் பரிசோதனைக் கண்காணிப்பாளர் திரு. ரி. பொன்னுத்துரை அவர்கள் 1969 ஒக்ரோபர் மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் 1969 ஒக்ரோபர் மாதம் 23 ஆந் திகதிவரை உதவிக் கணக்காய்வாளர் அதிபதியாகப் பதிற் கடமையாற்றுவார்.

ஏபி 12/69

5. உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரான திரு. டீ. எச். ஆர். ஏ. கொறியா அவர்கள் 8.12.1969 ம் திகதி தொடக்கம் இரண்டாம் தரப் பொலிசுக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏபி 132/67

6. 15.12.69 அன்று முதல் முடிக்குரிய சிரேட்ட சட்டவாதி திரு. ரி. ஏ. த எஸ். விஜேசுந்தர அவர்கள் பிரதி மன்றுடியார் அதிபதியாகப் பதிற் கடமைபுரிவார்.

ஏபி 132/67

7. 15.12.69 அன்று முதல் முடிக்குரிய சட்டவாதி திரு. பி. கொலின் தோமி அவர்கள் முடிக்குரிய சிரேட்ட சட்டவாதியாகப் பதிற் கடமை புரிவார்.

ஏ 10/68

8. உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் பதில் பிரதி ஆணையாளர் திரு. கே. எஸ். பராக்கிரம அவர்கள் 27.1.1970 ம் திகதியிலிருந்து பிரதி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ 123/67

9. உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் சிரேட்ட அரசிறை மதிப்பீட்டாளர் திரு. எச். ஏ. மித்திரசேன அவர்கள் 26.12.69 ம் திகதியிலிருந்து உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏ 123/67

10. உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் சிரேட்ட அரசிறை மதிப்பீட்டாளர் திரு. என். எஸ். எல். பெரேரா அவர்கள் 27.1.1970 ம் திகதியிலிருந்து உதவி ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

ஏ 5/70

11. இலங்கை நிருவாகச் சேவையைச் சேர்ந்த திரு. எல். டபிள்யூ. குணவர்த்தன அவர்கள் 1970 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 8 ஆந் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் பணிப்பாளராகப் பதிற் கடமையாற்றுவார்.

ஏபி 19/70

12. 1 ஆம் தரப் பொலிசுக் கண்காணிப்பாளரான திரு. ரி. பீ. வேரப்பிட்டிய அவர்கள் 1970, ஏப்பிறில் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஒரு பிரதிப் பொலிசுச் சோதனைகாரர் அதிபதியாகப் பதிற் கடமையாற்றுவார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. அ. பெ. 500,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 11 ந் டீ.

5–464

## நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 183

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எஸ். கனகரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் .. | 1970 மே 8 .. | திரு. ஜே. ஜே. சவ். ஏ. டயஸ் இல்லாத காலம் |
| திரு. சி. எல். டீ சில்வா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி .. | 1970 மே 8 லிருந்து 10 வரை | திரு. எல். எச். டீ அலவிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சிவகுருநாதன் .. | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு .. | 1970 மே 8 .. | திரு. என். தெவேந்திரா இல்லாத காலம் |
| திரு. ஏ. ஈ. சி. பெரெரா .. | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு .. | 1970 மே 8 ம், 9 ம் .. | திரு. சி. ஈ. மெண்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகருஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளை முதலிய இடங்களில் .. | 1970 மே 17 லிருந்து 22 வரை | திரு. எஸ். செல்லையா இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எச். அபேசேகர .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பதுளை | 1970 மே 6 லிருந்து 10 வரை | திரு. ரி. டி. ஜி. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம்—புத்தளம் | 1970 மே 10ம், 11ம் .. | திரு. எம். ஏ. எம். உசேன் இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம் புத்தளம் | 1970 மே 5 .. | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. சி. ஈ. பெரைரா .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1970 மே 6 .. | திரு. ஆர். நவரட்ணம் இல்லாத காலம் |
| திரு. ரி. குணரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை | 1970 மே 17 .. | திரு. எம். எம். அப்துள்காதர் இல்லாத காலம் |
| திரு. ஆர். குலதுங்க .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, மாத்தறை | 1970 மே 22 .. | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. ஏ. சிமரம்பிள்ளை .. | மேலதிக நீதவான் முதலியன, மன்னூர் | 1970 மே 20லிருந்து 22 வரை | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. சி. இராசையா .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 19, 22, 23 .. | திரு. ஐ. இருபாகரன் இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | தேவமிதி அற்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் .. | 1970 மே 6 .. | திரு. சி. ஏ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலம் |
| திரு. ஏ. சி. ஜபார் .. | பாணமைப்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 2லிருந்து 4 வரை | திரு. எஸ். ருஜனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. எம். குணசேகர .. | மாகம்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஏப்ரல் 20 .. | திரு. எச். எம். எஸ். பி. மாதவல இல்லாத காலம் |
| திரு. ஏ. சிமாம்பிள்ளை .. | மன்னூர் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் .. | 1970 மே 17 ம், 19 ம் .. | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. ஜீ. சூரியஆராச்சி .. | வெளடவிலி அற்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 8 ம், 9 ம் .. | திரு. டி. பி. எல்லப்பொல இல்லாத காலங்கள் |
| திரு. என். சி. ருஜபக்ச .. | வெளடவிலி அற்பற்று முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 மே 3 ம், 4 ம் .. | திரு. டி. பி. எல்லப்பொல இல்லாத காலங்கள் |

சிறீமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 573, கொழும்பு 12,
1970 மே 12.

5—501.

---

## அரசாங்க அறிவித்தல்கள்

எண். டி. 39/பி/சீசஆர்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள், 1934, சனவரி மாதம் 26 ஆம் திகதிய 8,029 ஆம் இலக்க அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி, தரைப்படைத் தொண்டர் படையின் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலருக்கு வினைத் திறமை அலங்காரம் (இலங்கை) அளிப்பதில் களிகூர்ந்துள்ளார்:

மேஜர் வடுதந்திரிகே ஹென்றி த சில்வா, சி.சி.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,
ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.

5-445

எல். டீ. பீ. 23/63

## 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

### 119 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 119 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதியமைச்சர் உக்குபண்டா வன்னிநாயக்காவாகிய யான், இலங்கையில் எவ்விடத்திலேனும் நெருப்புக்குச்சு உற்பத்தி செய்பவராகவுள்ள எவரேனும் ஆள் ஒருவரால், அவ் வியாபாரத்தின் மூலம் பெறும் மொத்த விற்பனவு சம்பந்தமாக வியாபார மொத்த விற்பனவு வரியை கணிக்கப்படும் விதம் மொத்த விற்பனவுப் பணத்தொகையின் மூன்று சதவிகிதமாக இருக்க வேண்டுமென நியமிக்கப்பட்டதன் மூலம் 1969 திசம்பர் 26 ஆம் திகதி 14,884/1 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் பிரசுரிக்கப்பட்ட வியாபார மொத்த விற்பனவு வரிவிகிதங்களை 1970 யூலை 1 ஆம் திகதியிலிருந்து பயன்படுத்துதலை இக்கட்டளையின் மூலம் மாற்றுகின்றேன்.

யூ. பி. வன்னிநாயக்கா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ மே ௴ 10 ந் உ.

5–433

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, மதுபான, வின்னாரித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், தொழில் வசதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன வென்று மேற்கூறிய சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

ஜீ. பி. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில், தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ௵ மே ௴ 8 ந் உ.

### அட்டவணை

கள்ளு, சாராய, வின்னாரித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு மே மாதம் 24 ந் தேதி வெளிவந்த 9,560 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 9,594 ம் இலக்க வர்த்தமானியிலும், 1951 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ந் தேதி வெளிவந்த 10,312 ம் இலக்க வர்த்தமானியிலும், 1952 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் தேதி வெளிவந்த 10,345 ம் இலக்க வர்த்தமானியிலும், 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 10,976 ம் இலக்க வர்த்தமானியிலும், 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் தேதி வெளிவந்த 12,036 ம் இலக்க வர்த்தமானியிலும், 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 4 ந் தேதி வெளிவந்த 12,073 ம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் மேலும் பின்வருமாறு மாற்றப்படும் :—

(1) அவ்வட்டவணையின் III ம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தை இடுதலால் :—

### III ம் பாகம்

I ம் பத்தியிற் குறிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு நேரவேலைக்கு இயைபுடைய கீழெல்லைச் சம்பள வீதங்கள் அவ்வத்தொழிலாளர் வகுப்புக்கு நேரே II ம் பத்தியிற் குறிக்கப்பட்ட வீதங்களாகும்.

எம்மாதத்திலேனும், ஒரு தொழிலாளி அனுமதியின்றி வேலைக்கு வராத காலம் 4 நாட்களுக்கு மேற்படின், அவ்வேலைசெய்த நாட்களின் தொகையுடன் 4 ஐக் கூட்டிய தொகைக்கும், 30 க்கும் என்ன விகிதசமம் இருக்கிறதோ, அதே வீத சமத்தை கீழெல்லை மாதாந்தர வீதத்திற்கு உடைய தொகை ஒன்றே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

| I ம் பத்தி<br>தொழிலாளிகளின் வகுப்பு | II ம் பத்தி<br>வீதம் | |
|---|---|---|
| பின்வரும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளிகள் :— | | ரூ. ச. |
| தோப்புக் கண்காணியின் வேலை .. | ஒவ்வொரு மாதத்திற்கும் | 115 0 |
| கள்ளுத் தவறணைக் காவலாளியின் வேலை .. | டிை | .. 63 0 |
| சாராயத் தவறணைக் காவலாளியின் வேலை .. | டிை | .. 63 0 |
| தோப்புக் காவலாளியின் வேலை .. | டிை | .. 50 0 |
| சேர்க்கும் நிலைய முகாமையாளர் வேலை .. | டிை | .. 85 0 |
| தவறணைகளில் கள்ளு விற்கும் வேலை .. | டிை | .. 80 0 |
| தவறணைகளில் சாராயம் விற்கும் வேலை .. | டிை | .. 75 0 |
| தொழிலின் கள்ளுப் பிரிவில், தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (கள்ளுக் கொண்டு போதல், ஏற்றுதல், இறக்குதல், பீப்பாக்கள், கள்ளுச் சாடிகள், உபகரணங்கள், மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கழுவுதல் ஆகிய வேலைகள் உட்பட) | டிை | .. 80 0 |
| தொழிலின் வின்னாரிப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (ஏற்றிச் செல்லும் வேலையுட்பட) | டிை | .. 52 50 |
| வடிசாலையிற் கள்ளைக்காய்ச்சி வடித்தல் .. | டிை | ..175 0 |
| போத்தல்களிற் சாராயம் விடுதலும் அடைத்தலும், நாமவிலாசம் ஒட்டுதலும் | ஒவ்வொரு சாதாரண வேலை நாளுக்கும் | 3 0 |
| விறகு வெட்டுதலும் பிளத்தலும், வடிசாலையில் பீப்பாக்கள், கழுவும் பாத்திரங்கள், வடிபாத்திரங்கள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தலும், கழுவுதலும் ; சாராயம் கொண்டு போதலும், ஏற்றுதலும், இறக்குதலும் ; சாராயம் அளத்தல் ; போத்தலில் கள்ளு விடுதலும் அடைத்தலும், வின்னாரி தயாரித்தல், போத்தலில் வின்னாரி விடுதலும், அடைத்தலும், நாமவிலாசம் ஒட்டுதலும், வின்னாரியை வினியோகித்தற்கு ஏற்றிச் செல்லலும் | டிை | .. 5 0 |
| தொழிலின் சாராயப் பிரிவில் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (ஏற்றிச் செல்லும் வேலையுட்பட)— | | |
| 80 அல்லது 80 க்கு உட்பட்ட மரங்களுக்கு .. | ஒவ்வொரு மாதத்திற்கும் | 60 0 |
| 81 க்கு உட்படாதனவும் 90 க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | டிை | .. 65 0 |
| 91 க்கு உட்படாதனவும் 100 க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | டிை | .. 70 0 |
| 101 க்கு உட்படாதனவும் 110 க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | டிை | .. 75 0 |
| 111 க்கு உட்படாதனவும் 120 க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | டிை | .. 80 0 |
| 121 க்கு உட்படாதனவும் 130 க்கு மேற்படாதனவுமான மரங்களுக்கு | டிை | .. 85 0 |
| 131 க்கு உட்படாதனவும் 131 க்கு மேற்பட்டனவுமான மரங்களுக்கு | டிை | .. 90 0 |

5–438

4 ஏ. படிவம்

## இந்திய, பாகிஸ்தான் வாசிகள் (பிரஜாவுரிமைச்) சட்டம்

**இலங்கைச் சட்டவாக்கங்கள், அதிகாரம் 350 சட்டத்தின் 11 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

இந்திய, பாகிஸ்தான் வாசிகள் பதிவு அதிகாரியாகிய விஜயபால ரியூடர் ஜயசிங்க ஆகிய நான், இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்தினுள் பொதுமக்கள் எவரிடமிருந்தும், எழுத்துருவில் அத்தகைய கட்டளை இடுவதை ஆட்சேபித்தும், அதற்கான காரணங்களை அல்லது உண்மைகளைக் காட்டியும் செய்யப்படும் ஆட்சேபனை எனக்குக் கிடைக்கா விட்டால் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறு சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் பகுதியின் கீழ் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிக்கக் கட்டளையிடுவேன் என இலங்கைச் சட்டவாக்கங்கள், அதிகாரம் 350 இன் இந்திய, பாகிஸ்தான் வாசிகள் (பிரஜாவுரிமைச்) சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.

ஆட்சேபணை அறிக்கை ஒவ்வொன்றும் ஆட்சேபணை இடுபவரின் முழுப் பெயரையும் விலாசத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
இந்திய, பாகிஸ்தான் வாசிகள் பதிவு அதிகாரி.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே உ 8 ந் உ.

**அட்டவணை**

| இலக்கமும் விண்ணப்பத்தின் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பம் செய்துள்ளவரின் பெயரும் விலாசமும் |
|---|---|
| பு. 2251, ஆகஸ்ட் 2, 1951 | மாடார்காணி மொகமது மொகிதீன் காதர் சாகிப் கச்சி மொகிதீன்<br>எம். எம். கே. கே. ஸ்டோர்ஸ், இல. 107, 108, பாங்க்சயிற், புதிய நகரம், அனுராதபுரம். |

5–409.

---

## 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

**49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்**

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர் மஹாபாலகே தொன் ஹென்றி ஜயவர்த்தன ஆகிய நான் மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைகளில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டும் என இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

எம். டீ. எச். ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந் உ.
சீ எஸ் 2/பீ ஈ/6.

**1 ம் அட்டவணை**

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பெ. இ. உ. பிரிவிலுள்ள பிற்றக்கோட்டையிலும், 522 ம் இலக்க கிராம சேவகர் பிரிவிலும், பிற்றக் கோட்டையில் அமைந்துள்ள, கிட்டத்தட்ட 4 ஏ. 3 று. 0 பே. விஸ்தீரணமுள்ள பெலவத்தை அல்லது கொங்கஹாவத்தை எனப்படும் காணித்துண்டு ஒன்று, அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : மிஷன் ஒழுங்கையும், அதே காணியின் பகுதியும்.

தெற்கு : 21 ம் வரிமதிப்பு இல. மிஷன் ஒழுங்கையும், 28/6 ம் வரிமதிப்பு இல. எபிற்றமுல்லே றோட்டும், 10/4 ம் வரிமதிப்பு இல. எபிற்றமுல்லே றோட்டும், 28/7 ம் வரிமதிப்பு இல. எபிற்றமுல்லே றோட்டும்.

கிழக்கு : 25/16–17 ம் வரிமதிப்பு இல. மிஷன் றோட்டும், 20/7 ம் வரிமதிப்பு இல. எபிற்றமுல்லே றோட்டும், 20 ம் வரிமதிப்பு இல. எபிற்றமுல்லே றோட்டும்.

மேற்கு : மிஷன் ஒழுங்கை.

**2 ம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு பெ. இ. உ. பிரிவிலுள்ள பிற்றக் கோட்டையிலும் 522 ம் இல. கிராம சேவகர் பிரிவிலும், பிற்றக் கோட்டையில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 1 ஏ. 1 று. 05·2 பே. விஸ்தீரணமுள்ள பெலாவத்தை அல்லது கொங்கஹாவத்தை எனப்படும் ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : 22/3 ம் வரிமதிப்பு இல. மிஷன் ஒழுங்கையும், திரு. ஏக்க நாயக்கவுக்குச் சொந்தமான காணியும்.

தெற்கு : மிஷன் ஒழுங்கை.

கிழக்கு : 8 அடி நடைப்பாதை.

மேற்கு : 23/7 ம் வரிமதிப்பு இல. மிஷன் ஒழுங்கை.

5–466.

---

## 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

**49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்**

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர் மஹாபாலகே தொன் ஹென்றி ஜயவர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டும் என இதனால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

எம். டீ. எச். ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 2 ந் உ.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளையின் பத்தரமுல்லே 492 ம் இலக்க கிராமசேவகரின் பிரிவினுள்ளே அமைந்துள்ள, ஏ. 0, று 3, பே. 04·0 விஸ்தீரணமுள்ள, லொக்கு ஆராயச்சிகே குருந்துவத்தை, முஙகுமுகம்திரம்கே குருந்துவத்தை எனப்படும் காணியின் 3 ம் கூறு என குறிப்பிடப்பட்ட பகுதி முழுமையும் உத்தரவுபெற்ற அளவையாளர் திரு. எச். டீ. சிரிசேன அவர்களாற் தயாரிக்கப்பட்ட 1968 ம் ஆண்டு யூலை மாதம் 3 ம் தேதியிடப்பட்ட 1163 ம் இலக்க அளவை வரைபடத்தில் காட்டப்பட்டது. அதன் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. எச். டீ. சிரிசேன அவர்களாற் தயாரிக்கப்பட்ட 3.7.68 ம் தேதியிடப்பட்ட 1163 ம் இல. அளவை வரைப்படத்திற் காட்டப்பட்ட 1 ம், 2 ம், கூறுகள்.

கிழக்கு : உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. எச். டீ. சிரிசேன அவர்களாற் தயாரிக்கப்பட்ட 3.7.68 ம் தேதியிடப்பட்ட 1163 ம் இல. அளவை வரைப்படத்தில் காடப்பட்ட 4 ம் கூறு.

தெற்கு : உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. எச். டீ. சிரிசேன அவர்களாற் தயாரிக்கப்பட்ட 3.7.68 ம் தேதியிடப்பட்ட 1163 ம் இல. அளவை வரைப்படத்திற் காட்டப்பட்ட 5 ம் கூறு.

மேற்கு : உத்தரவு பெற்ற அளவையாளர் திரு. எச். டீ. சிரிசேன அவர்களாற் தயாரிக்கப்பட்ட 3.7.68 ம் தேதியிடப்பட்ட 1163 ம் இல. அளவை வரைப்படத்தில் காட்டப்பட்ட 2 ம் கூறு.

5–397.

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## இலங்கை அரச ஈட்டு வங்கி

### படிவம் " இ "

### 5. அரச ஈட்டு வங்கிச் சகாய நிதிக் கணக்கு

**1969 செற்றெம்பர் 30 ம் திகதியன்று எடுக்கப்பட்ட ஐந்தொகைக் கணக்கு**

**பொறுப்புகள் :**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| முற்போந்த ஆண்டு முடிவதற்கண்மையில் பணியாட்டொகுதியின் உதவு தொகை .. | 3,08,521 02 | |
| 30.9.69 ல் முடிந்த ஆண்டுக்கான பணியாட்டொகுதியின் உதவு தொகை .. | 42,611 19 | |
| | 3,51,132 21 | |
| **கழிக்க :** சேவைக்கால முடிவில் உறுப்பினர்க்குக் கொடுக்கப்பட்ட தொகை .. | 1,28,245 16 | |
| | 2,28,887 05 | |
| **கழிக்க :** காப்புறுதிக் கட்டுத்தொகையின் பேரில் கொடுக்கப்பட்ட தொகை .. | 29,911 64 | |
| | | 1,92,975 41 |
| முற்போந்த ஆண்டு முடிவதற்கண்மையில் வங்கியின் உதவு தொகை .. | 4,27,940 68 | |
| 30.9.69 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் உதவு தொகை .. | 59,070 55 | |
| | 4,87,011 23 | |
| **கழிக்க :** சேவைக்கால முடிவில் உறுப்பினர்க்குக் கொடுக்கப்பட்ட தொகை .. | 2,05,408 45 | |
| | 2,81,602 78 | |
| **கழிக்க :** காப்புறுதிக் கட்டுத் தொகையின் பேரில் கொடுக்கப்பட்ட தொகை .. | 2,470 26 | |
| | | 2,79,132 52 |
| உறுப்பினர்களின் சொந்த உதவு தொகைகள் மீதும், வங்கியின் உதவு தொகை மீதும் உறுப்பினருக்கு வரவாக உள்ள வட்டி .. .. | 1,27,698 74 | |
| **கழிக்க ;** சேவைக்கால முடிவில் உறுப்பினர்க்குக் கொடுக்கப்பட்ட தொகை .. | 44,238 92 | |
| | 83,459 82 | |
| **கழிக்க :** காப்புறுதிக் கட்டுத் தொகையின் பேரில் கொடுக்கப்பட்ட தொகை .. | 235 80 | |
| | | 83,224 02 |
| உறுப்பினர்களின் பூர்த்தியான தொங்கற் கணக்கு .. .. | | 7,164 29 |
| | | 5,62,496 24 |

**சொத்துகள் :**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| அரச ஈட்டு வங்கியின் 4½% கடனீட்டு முறிகள் .. .. | 71,000 0 | |
| இலஙகை அரசாங்கக் கடன், 4½% 1985–89 " எவ் " தொடர் .. .. | 70,000 0 | |
| | | 1,41,000 0 |
| சேர்ந்த நிலையான வைப்புக் கணக்கின் மீதான வட்டி .. .. | | 613 01 |
| உறுப்பினர்க்குக் கடன்கள் .. | 8,90,611 27 | |
| **கழிக்க :** திருப்பிக்கொடுக்கப்பட்ட முதல் .. | 5,38,653 56 | |
| | | 3,51,957 71 |
| சேர்ந்த கடன் மீதான வட்டி .. | | — |
| சேர்ந்த முதலீட்டு வட்டி .. | | 258 90 |
| அரச ஈட்டு வங்கி வருமானக் கணக்கிலிருந்து மாற்றப்படவிருக்கும் காசு .. | | 4,784 41 |
| வங்கியிலுள்ள காசு : நடப்புக் கணக்கில் .. | | 18,882 21 |
| நிலையான வைப்புக் கணக்கில் . | | 45,000 0 |
| | | 5,62,496 24 |

**1969 செற்றெம்பர் 30 ம் திகதியன்றுள்ளவாறுன வருமானம் செலவினம் என்பன பற்றிய கூற்று**

**செலவினம் :**

| | ரூ. ச. |
|---|---|
| கடன் முறிகள் மீதான முத்திரைக் கட்டணம் .. | — |
| சில்லறைச் செலவுகள்.. .. .. | 3 56 |
| உறுப்பினர்க்கு வரவாகும் வட்டி .. .. | 26,078 75 |
| அரச ஈட்டு வங்கி வருமானக் கணக்கிலிருந்து கடன் மீதான வட்டி .. .. .. | — |
| தொங்கற் கணக்கிலுள்ள வருமானமும் செலவினமும் .. | — |
| செலவினத்தை விஞ்சிநிற்கும் வருமானம் .. | — |
| | 26,082 31 |

**வருமானம் :**

| | ரூ. ச. |
|---|---|
| கடந்ததின் செலவினத்தை விஞ்சிநிற்கும் வருமாணம் .. | — |
| வீடமைப்புக் கடன் மீது வட்டி .. .. | 4,328 92 |
| கடனீட்டு முறிகளின் மீது வட்டி .. .. | 3,017 50 |
| உறுப்பினர் கடன்களின் மீது வட்டி .. .. | 10,600 69 |
| நிலையான வைப்புக் கணக்கு மீது வட்டி .. | 788 01 |
| 30.9.69 வரையுள்ள ஆண்டுப் பற்றுக்குறை .. | 4,197 19 |
| முதலீடு மீதுள்ள வட்டி .. .. | 3,150 0 |
| | 26,082 31 |

முதற் கணக்காளர் : (ஒப்பம்) எம். இசட். ரஹ்மான்,
பொது முகாமையாளர் : (ஒப்பம்) எச். பி. கப்புவத்த.

தலைவர் : (ஒப்பம்) என். பி. டி எஸ். விஜேசேகரா,
பணிப்பாளர் : (ஒப்பம்) ஏ. எல். எஸ். டெடிகமை,
எம். ஓ. ஆர். மெடோன்சா,
அன்ரன் விக்கிரமசிங்க.

1970 ம் ஆண்டு ஜனவரி மீ 19 ந் உ.

5–515/1

முதற் கணக்காளர் :
(ஒப்பம்) : எம். இசட். ரஹ்மான்.

பொது முகாமையாளர் :
(ஒப்பம்) : எச். பீ. கப்புவத்த.

தலைவர் :
(ஒப்பம்) : என். பீ. டீ. எஸ். விஜேசேகரா.

பணிப்பாளர் :
(ஒப்பம்) : ஏ. எல். எஸ். டெடிகமை,
எம். ஓ. ஆர். மெடோன்சா,
அன்ரன் விக்கிரமசிங்க.

1970 ம் ஆண்டு ஜனவரி மீ 19 ந் உ.

மேலே தரப்பட்டுள்ள அரசாங்க ஈட்டு வங்கியின் கணக்குகள் எனது பணிப்பின் கீழ்ப் பரிசோதிக்கப்பட்டன. 1957 ம் ஆண்டின் 18 ம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட, அரசாங்க ஈட்டு வங்கிக் கட்டளைச்சட்டத்தின் (அத். 398) 90 ம் பிரிவிற்கமைய இக்கணக்குகள் மீதான அறிக்கையும், உறுதிப்படுத்தலும் வங்கிப் பணிப்பாளர் சபைத் தலைவருக்கு 1970 ம் ஆண்டு ஜனவரி 29 ம் திகதியின் இல. பீ–1 (எஸ் எம் பீ) 90 என்ற எனது கடிதத்துடன் அனுப்பப்பட்டுள்ளன.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந் உ.

(ஒப்பம்) : சீ. முத்துக்குமாரசுவாமி,
பிரதம கணக்காய்வாளருக்காக.

## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி

### படிவம் ஆ

### 2. 1969 செற்றம்பர் 30 ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

**பற்று**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| கடனீட்டுமுறி உடையோர்க்கான வட்டி .. | | 1,167,491 68 |
| தொழிற் செலவுகள்— | | |
| சட்ட ஆலோசகர்க்குரிய கட்டணம் .. | 4,114 25 | |
| விலைமதிப்பிடுபவர்க்குரிய கட்டணம் .. | 28,454 74 | |
| பணிப்பாளர்க்குரிய கட்டணம் .. | 11,241 93 | |
| சம்பளங்களும், படிகளும் .. | 480,547 87 | |
| கணக்காய்விற்குரிய கட்டணம் .. | 14,000 00 | |
| எழுதுகருவிகளும், அச்சிடுதலும் .. | 29,765 79 | |
| அஞ்சற் செலவுகள் .. .. | 10,081 50 | |
| விளக்குகளும், தொலைபேசிகளும் .. | 8,440 90 | |
| விளம்பரப்படுத்தல் .. .. | 9,676 69 | |
| சில்லறைச் செலவுகள் .. .. | 9,250 17 | |
| தொழில் வளவு வாடகை .. | 10,800 00 | |
| பிணையாவணங்களின் மீளப் பரிசோதிப்பு சம்பந்தமாகப் பரிசோதகர்கட்குரிய பயண, உணவுப் படிகள் .. | 806 50 | |
| கட்டிடக் கலைஞர்க்குரிய கட்டணங்கள் .. | 2,992 50 | 620,172 84 |
| மீளப்பண ஏற்பாட்டுக் கடன் மீதான வட்டி .. | | 2,313 68 |
| மேலதிகப் பற்றின் மீதான வட்டி .. | | 1,373,743 35 |
| சகாய நிதிக்கு வங்கி உதவுத் தொகை .. | | 63,267 74 |
| மற்ற விடயங்கள்— | | |
| மீளளிப்புகள் .. .. | 27,249 13 | |
| தேய்மானம் .. .. | 14,010 11 | |
| கட்டிடப் பழுதுபார்ப்பும், பேணலும் .. | 375 00 | |
| வீதங்களும், வரிகளும் .. | 2,352 00 | |
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் நிலைப்புகள், பொருத்திகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலும், பேணலும் .. | 3,262 06 | |
| பணியாட்டொகுதியின் உடனலக் காப்புறுதியும், மருத்துவச் செலவுகளும் .. | 11,231 30 | |
| நூலகம் .. .. | 1,010 62 | 59,490 22 |
| கீழே கொண்டுவரப்பட்ட மீதி .. | | 485,702 61 |
| | | 3,772,182 12 |

**வரவு**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| கடன்கள் மீதான வட்டி— | | |
| ஆண்டின்போது வரவேண்டிய வட்டியும், பெறப்பட்ட வட்டியும் .. | 2,383,565 13 | |
| சேர்ந்த வட்டி .. .. | 743,283 59 | 2,126,848 72 |
| ஒதுக்குநிதி முதலீடுகளின் மீதான வட்டி— ஆண்டின்போது வரவேண்டிய வட்டியும் பெறப்பட்ட வட்டியும் .. | 54,184 47 | |
| சேர்ந்த வட்டி .. .. | 27,988 07 | 82,172 54 |
| முற்பணங்கள் மீதுள்ள, வரவேண்டிய, சேர்ந்த, கடன் கணக்குகள் மூலம் அறவிடப்படக்கூடிய வட்டி .. | | 4,907 75 |
| முற்பணங்கள் மீதுள்ள வட்டி— | | |
| வங்கியலுவலர்க்குரிய வீடமைப்புத்திட்டம் | 4,292 38 | |
| அவதிக் கடன்கள் மீதான வட்டி .. | 3 37 | |
| போக்குவரத்துச் சாதனங்கள் கொள்வனவு .. .. | 863 90 | 5,195 65 |
| கட்டணங்களும், தரகுகளும்— | | |
| கடன் விண்ணப்பங்கட்குரிய கட்டணம் .. | 62,324 41 | |
| கடன் வழங்கல் மீதான தரகு .. | 26,254 80 | 88,579 21 |
| குற்ற வட்டி .. .. | | 459,901 90 |
| நானாவிதமானவை— | | |
| ஈட்டுப் பிணைப்பத்திரங்களின் பிரதிகள் .. | 4,412 00 | |
| காலங் கடந்துபோன வைப்புக் கணக்கு .. | 200 35 | 4,612 35 |
| | | 3,772,182 12 |

| | ரூ. ச. |
|---|---|
| ஒதுக்கு நிதிக்கு மாற்றப்பட்டது .. .. | 50,393 25 |
| வரிவிதிப்புக்காக ஒதுக்கப்பட்டது .. .. | 250,068 00 |
| மீதி .. .. .. | 2,089,076 66 |
| | 2,389,537 91 |

| | ரூ. ச. |
|---|---|
| முந்திய ஆண்டின் மீதி .. .. | 1,900,452 60 |
| கீழே கொண்டுவரப்பட்ட மீதி .. .. | 485,702 61 |
| திருப்பி எழுதப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் .. | 3,382 70 |
| | 2,389,537 91 |

முதற் கணக்காளர் :
(ஒப்பம்) : எம். இசட். ரஹ்மான்.

பொது முகாமையாளர் :
(ஒப்பம்) : எச். பீ. கப்புவத்த.

தலைவர் :
(ஒப்பம்) என். பீ. டீ. எஸ். விஜேசேகரா.

பணிப்பாளர் :
(ஒப்பம்) ஏ. எல். எஸ். டெடிகமை,
எம். ஓ. ஆர். மெடோன்சா,
அன்ரன் விக்கிரமசிங்க.

1970 ம் ஆண்டு ஜனவரி மீ 19 ந் உ.

5—515/2

# இலங்கை அரச ஈட்டு வங்கி

## படிவம் அ

### இலங்கை அரச ஈட்டு வங்கியின் 30.9.69 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கினங்கள்

### 1. 30.9.69 இல் எடுக்கப்பட்ட ஐந்தொகைக் கணக்கு

| பொறுப்புகள் | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| வழங்கப்பட்ட கடனீட்டு முறிகள் | 8,06,55,050 0 | |
| **கழிக்க :** கடன் முதல்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டமையால் மீட்கப்பட்ட கடனீட்டு முறிகள் | 4,84,05,050 0 | |
| | | 3,22,50,000 0 |
| ஒதுக்கு நிதி : | | |
| 1.10.68 இலிருந்து மீதி | 33,50,834 30 | |
| **கூட்டுக :** வருமானக் கணக்கிலிருந்து மாற்றப்படுவது | 50,393 25 | |
| | | 34,01,227 55 |
| வரி விதிப்பு : | | |
| வருங்கால வரிவிதிப்புக்கான ஒதுக்கு | 2,50,068 0 | |
| நடப்பு வரிவிதிப்புக்கான பொறுப்பொதுக்கு | 3,44,932 0 | |
| | | 5,95,000 0 |
| சில்லறைக் கடன் கொடுத்தோர் : | | |
| பணங்கொடுத்தலுக்கான கணக்குகள் | 1,71,580 12 | |
| கடனீட்டு முறிமீதான திரள்விடப்படும் வட்டி | 234 37 | |
| மீட்கப்படும்படி கட்டளையிடப்பட்ட ஆனல் சமர்ப்பிக்கப்படாத கடனீட்டு முறிகள் | 151 90 | |
| முற்கூட்டிப் பெறப்பட்ட கடன்கள் மீதான வட்டி | 1,044 03 | |
| | | 1,73,010 42 |
| மத்தியவங்கியின் மீளப்பண ஏற்பாட்டுக் கடன்கள் | | 2,44,890 0 |
| வைப்புகள்—காணி மீட்பு | | 55,652 97 |
| தொங்கற் கணக்கு— | | |
| மேலதிக வைப்புகளும், தவணைப் பணம் தொடர்பான | 9,28,994 56 | |
| பகுதிக் கொடுப்பனவுகளும் மற்ற வைப்புகள் | 44,963 04 | |
| இன்னதெனக் காணப்படா வைப்புகள் | 21,416 26 | |
| கடன் விண்ணப்ப வைப்பின் செலவிடப்படா மீதி | 3,37,466 82 | |
| | | 13,32,840 68 |
| வங்கியாளருக்குத் தரவேண்டியது : | | |
| மூலதனக் கணக்கின் மீது | | 2,53,30,636 36 |
| இலாப நட்டக் கணக்கு | | 20,89,076 66 |

| சொத்துகள் | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|---|
| ஈடுகளின் மீதான கடன்கள் | | 13,12,04,331 86 | |
| **கழிக்க :** திருப்பிக்கொடுக்கப்பட்ட முதல் | | 7,22,79,976 06 | |
| | | | 5,89,24,355 80 |
| ஒதுக்கு நிதி முதலீடுகள் : | | | |
| கொள்விலையில் அரசாங்கப் பிணைப் பத்திரங்கள் | ரூ. ச. | 20,53,000 0 | |
| காணிகளும், கட்டடங்களும் | 1,51,583 48 | | |
| ஆண்டிற்குள் புதிதாகச் சேர்க்கப்பட்டவை | 160 0 | | |
| | 1,51,743 48 | | |
| **கழிக்க :** பெறுமானத் தேய்மானம் | 3,579 17 | | |
| | | 1,48,164 31 | |
| | | | 22,01,164 31 |
| ஒதுக்கு நிதி முதலீட்டின் மேலுள்ள வரவேண்டிய வட்டியும், பெறப்பட்ட வட்டியும் | | | 27,988 07 |
| எழுதுகருவி வகைகள் | | | 18,083 18 |
| சேர்ந்த வட்டி | | 7,43,283 59 | |
| வரவேண்டிய வட்டி | | 15,00,699 99 | |
| வரவேண்டியதும், சேர்ந்ததுமான குற்றவட்டி | | 15,04,758 35 | |
| முற்பணங்கள் மீதான வட்டியில் வரவேண்டியதும், சேர்ந்ததும் | | 7,896 77 | |
| | | | 37,56,638 70 |
| 1.10.68 இல் இருந்த தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், நிலைப்புகள், பொருத்திகள் | | 1,04,309 54 | |
| ஆண்டிற்குள் புதிதாகச் சேர்க்கப்பட்டவை | | 46,741 80 | |
| | | 1,51,051 34 | |
| **கழிக்க :** தேய்மானம் | | 10,430 94 | |
| | | | 1,40,620 40 |
| முற்பணமாகக் கொடுக்கப்பட்டவை : | | | |
| காலம் முடிவடையாத் தொலைபேசி வாடகை | ரூ. ச. | 3,673 46 | |
| வைப்புகள்—மின்சாரத் திணைக்களம் | 600 0 | | |
| தொலைபேசி | 275 0 | | |
| | | 875 0 | |
| | | | 4,548 46 |
| சம்பள முற்பணங்கள் : | | | |
| விழாக்களுக்காக—திருப்பிக்கொடுக்கப்பட்டவை நீங்கலாக | | 1,948 70 | |
| வங்கி அலுவலர்க்கு வீடமைப்புக்கடன்களுக்காக—திருப்பிக்கொடுக்கப்பட்டவை நீங்கலாக | | 83,381 12 | |
| வாகனங்கள் கொள்வனவிற்காக—திருப்பிக்கொடுக்கப்பட்டவை நீங்கலாக | | 12,206 37 | |
| மற்ற முற்பணங்கள் | | 3,270 70 | |
| | | | 1,00,806 89 |

| | ரூ. ச. | | ரூ. |
|---|---|---|---|
| சில்லறைக் கடன்பட்டோர் : | | | |
| தொங்கற் கணக்கு (அறவிடப்படவேண்டியது)—வங்கியாற் கடனளிக்கப்பட்ட காப்புறுதிக் கட்டுத்தொகைகள் | 94,871 02 | | |
| தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகள் சம்பந்தப்பட்ட முற்பணங்கள் | 302 25 | | |
| சட்ட ஆலோசனைக் கட்டணங்கள் | 5,431 15 | | |
| மற்ற விடயங்கள் | 1,09,274 98 | | 2,09,879 40 |
| வங்கிகளிலுள்ள மீதி : | | | |
| கடனீட்டு முறிகளின் மீதான திரள விடப்பட்ட வட்டி | | 234 37 | |
| கடனீட்டு முறி மீட்பு | | 151 90 | |
| மூலதனக் கணக்கு (மத்திய வங்கி) | | 1,000 0 | |
| வருமானக் கணக்கு | | 10,998 72 | |
| மக்கள் வங்கி | | 54,410 03 | |
| பொதுக் கணக்கு | | 21,416 26 | |
| கையிருப்புக்காசு—சில்லறை செலவுக்கான காசு | | 38 15 | 88,249 43 |

| | |
|---|---|
| 6,54,72,334 64 | 6,54,72,334 64 |

5-515/3

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

**277 (5) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்துக்கான அறிவித்தல்—வி. கெ. பி. அன்ட் சன்ஸ் லிமிரட்**

கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ம் திகதியில் உருவாக்கப்பெற்ற வி. கெ. பி. அன்ட் சன்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லையெனவும் செயற்படவில்லையெனவும் நம்புவதற்கு போதிய காரணம் இருப்பதாலும்,

1970.2.5 ம் திகதியையுடைய 14,892 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1970.1.12 ம் திகதியையுடைய அறிவித்தலின் பிரகாரம் வி. கெ. பி. அன்ட் சன்ஸ் லிமிரட், அதற்கு மாறுபாடாகக் காரணம் காட்டப்பட்டாலன்றி அந்தத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறும்போது பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருப்பதாலும்,

வி. கெ. பி. அன்ட் சன்ஸ் லிமிரட் மூன்று மாதகால எல்லைக்குள் மாறுபாடாகக் காரணம் எதையும் காட்டாதமையாலும்

கம்பனிகள் பதிவாளராகிய ஜெயரத்தினம் பீலிக்ஸ் பொன்னம்பலம் ஆகிய நான், (145 ம் அத்தியாயம்) 277 (5) ம் பிரிவின்கீழ் செயலேற்று இந்த அறிவித்தலின் மூலம் வி. கெ. பி. அன்ட் சன்ஸ் லிமிரட் என்னும் கம்பனி, இன்றைய தினம் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து பெயர்நீக்கம் செய்யப்பட்டு குலைக்கப்பட்டதென பிரகடனம் செய்கிறேன்.

ஜெ. பீ. பொன்னம்பலம்,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1, 1970 ம் ஆண்டு மே மாதம் 10 ம் திகதி.

5—502

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

**புகையிரதக் கடவைத் திருத்த வேலைகள்**

நீர்கொழும்பு-கொச்சிக்கடை புகையிரத நிலையங்களுக்கிடையில் புத்தளம் புகையிரதப் பாதையில் 24 மைல் 17 சங்கிலி 38 பாகத்தில் நீர்கொழும்பு நகரினூடாகச் செல்லும் சிலாபம் பாதையில் வீற்றிருக்கும் புகையிரதக் கடவை திருத்த வேலைகளுக்காக 3.6.70 ல் புதன்கிழமை காலை 7.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை பூரணமாக இல்லாது தடை செய்யப்படும். அத்துடன் திருத்த வேலைகள் பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டு புதன்கிழமை 3.6.70 ல் இரவு 7.00 மணி முதல் வியாழக்கிழமை 4.6.70 ல் காலை 7.00 மணிவரை போக்குவரத்துகள் முற்றுகத் தடைசெய்யப்படும்.

இவ்வேளையில் வாகனப் போக்கு வரத்துகள் கீழ்கண்டவாறு திருத்தப்படும்.

(அ) நீர்கொழும்பு நகரிலிருந்து கொழும்பு/புத்தளம் பாதையோடு சேரும் கொப்ரா சந்தி வழியாக லுனுகடை புகையிரதக் கடவையினூடாகவும்;

(ஆ) நீர்கொழும்பு நகரிலிருந்து சென். ஜோஸப் தெரு–கொழும்பு புத்தளம் பாதையோடு சேரும் தெல்வத்தை சந்தி வழியாக தில்லண்டுவ புகையிரதக் கடவையினூடாகவும்

(இ) தல்துவையிலிருந்து கொழும்பு–புத்தளம் பாதையோடுசேரும் கல்கந்த சந்திவழியாக தல்துவை புகையிரதக் கடவையினூடாகவும் திருப்பப்படும்.

(ஈ) பாரமற்ற வாகனங்களுக்கு—நீர்கொழும்பு நகரிலிருந்து கொழும்பு–புத்தளம்–சிலாபம் தெரு, வாய்கால் தெரு, அன்டர்ஸன் தெரு, அட்நீவ்ஸ் தெரு பெரியமுல்ல சந்தை வழியாக, அட்நீவ்ஸ் புகையிரதக் கடவையினூடாகவும் திருப்பப்படும்.

ஜே. போல் சேனரத்ன,
பிரதான புகையிரத அதிபருக்காக.

5-455

## புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் உற்சவம் 1970

புதூர் நாகதம்பிரான் கோவில் பொங்கல் உற்சவம் 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 30 ம் திகதி காலை 6.00 மணி தொடக்கம் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ம் திகதி மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

1949 ம் ஆண்டு வைகாசி மாதம் 27 ம் திகதி 1950 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ந் திகதியும் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் (இலக்கம் 9978, 27.5.49), (10,105, 26.5.50) குறிக்கப்பட்டுள்ள கட்டளைகள் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ்வுற்சவத்தில் தீவிரமாக அமுல் நடத்தப்படும்.

ஆ. பெருமயினார்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா.

வவுனியா கச்சேரி,
1970 ம் ஆண்டு மே மீ 11 ந் உ.

5-462

---

## 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டம் (அதிகாரம் 453)

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரத்ன பண்டா சேனநாயக ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய்சட்டத்தினல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள்) படி கண்டி அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினற் திருத்தப்பட்ட படியான மேற் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

எஸ். பி. சேனநாயக,
கமநலச்சேவை ஆணையாளர்.

1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 24 ந் உ.

### சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்

1. வேலையின் பெயரும் விவரணமும்: உடுநுவரை குரகன் தெனியே குளம். ஐ/25 (1.95 × 1.80)

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக் கூடிய காணியின் தன்மையும் அளவும்:—தனியாருக்குச் சொந்தமான காணி : 60 அண்ணளவான ஏக்கர் அளவு.

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழே தரப்பட்ட மிக முக்கியமான கட்டட வேலைகளை அதாவது:

(1) 195 அடி நீளமுள்ள கட்டுக் கட்டுதல்,

(2) சுளிசுடன் வான் கட்டுதல்,

(3) பாதுகாப்புச் சுவர் கட்டுதல்.

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூபா 59,000 வரைக்கும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம்மாருக காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமையுள்ள விவசாயிகளும் அல்லது எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக்காணிகளின் சொந்தக்காரர்கள், கட்டட வேலைகள் முடிந்ததன் பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணுவதற்கும் திருத்துவதற்குமான கூலியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித்துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்களில்லாத விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறுவராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனல் ஏற்படும் செலவினை இக் கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

5–436

---

## சேருவில பி. கா. பகுதியில் கால்நடைகளுக்கு குறிசுடல்—திருகோணமலை மாவட்டம்

29.11.62 திகதி 13,406 ம் இலக்க அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1968 ம் ஆண்டின் இரண்டாம் பாகத்தில் கூறிய 12 ம் விதியின் 3 ம் உபவிதியின்படி 1969/70 ஆண்டில் சேருவில பி. கா. பிரிவில் உள்ள கால்நடைகளுக்கு குறிசுடப்படும் விபரம் கீழ்த்தரப்பட்டுள்ளது.

திருகோணமலை
9.5.1970.

சோமபால குணதீர,
திருகோணமலை மாவட்ட அதிபர்.

| கி. சே. பகுதி இலக்கம் | கி. சே. பகுதியின் பெயர் | குறிசுடப்படும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 215 .. | சேருவில .. | பீ. பலிப்பானவின் வீட்டு அண்மையில் உள்ள .. அரசாங்க காணி | ஒவ்வொரு மாதமும் 1 ம் கிழமையில் 2ம் நாள் |
| 215 .. | ஷை .. | கூட்டுறவு அண்மையிலுள்ள அரசாங்க காணி, செல்வ நகர் | ஒவ்வொரு மாதமும் 1 ம் கிழமையில் 2 ம் நாள் |
| 215 .. | ஷை .. | சேருவில பாடசாலை அண்மையிலுள்ள அரசாங்க காணி “சி” பிரிவு .. | ஒவ்வொரு மாதமும் 1 ம் கிழமையில் 4 ம் நாள் |
| 215 .. | ஷை .. | மிகிந்தபுர அரசாங்க பாடசாலையின் அண்மையிலுள்ள அரசாங்க. காணி | ஒவ்வொரு மாதமும் 2 ம் கிழமையில் 1 ம் நாள் |
| 215 .. | ஷை .. | அரிப்பு வித்தியாலயம் அண்மையிலுள்ள அரசாங்க காணி | ஒவ்வொரு மாதமும் 2 ம் கிழமையில் 2 ம் நாள் |
| 215 .. | ஷை .. | கல்லசந்தி அண்மையிலுள்ள அரசாங்க காணி மகாவலிகம | ஒவ்வொரு மாதமும் 2 ம் கிழமையில் 3 ம் நாள் |
| 215 .. | ஷை .. | சோமபுர வித்தியாலய அண்மையிலுள்ள அரசாசாங்க காணி, கல்லார் | ஒவ்வொரு மாதமும் 2 ம் கிழமையில் 4 ம் நாள் |
| 214 .. | ஈச்சிலம்பத்தை .. | ஈச்சிலம்பத்தை .. .. | 6.6.70 |
| 214 .. | ஷை .. | கருக்காமுனை .. .. | 7.6.70 |
| 214 .. | ஷை .. | இலங்கத்துறை .. .. | 11.6.70 |
| 214 .. | ஷை .. | பூமரத்தடிச்சேனை .. .. | 14.6.70 |
| 214 .. | ஷை .. | மாவடிச்சேனை .. .. | 15.6.70 |
| 214 .. | ஷை .. | முட்டுச்சேனை .. .. | 16.6.70 |
| 214 .. | ஷை .. | வெருகல்முகத்துவாரம் .. .. | 17.6.70 |
| 214 .. | ஷை .. | வாழைத்தோட்டம் .. .. | 18.6.70 |
| 214 .. | ஷை .. | ஆனைச்சேனை .. .. | 21.6.70 |
| 217 .. | தெகிவத்த .. | நீலப்பொல நீர்ப்பாசன அரசாங்க விடுதி .. | ஒவ்வொரு மாதமும் 1 ம் கிழமையில் 5 ம் நாள் |
| 217 .. | ஷை .. | தெகிவத்த கி. சே. அலுவலக அண்மையில் | ஒவ்வொரு மதமும் 2 ம் கிழமையில் 5 ம் நாள் |
| 217 .. | ஷை .. | தெகிவத்த கி. சபைக் கட்டிடம் அண்மையில் எல். பி. 3 | ஒவ்வொரு மதமும் 3 ம் கிழமையில் 2 ம் நாள் |
| 217 .. | ஷை .. | சோமபுர குடியேற்ற அதிபரின் அலுவலக அண்மையில் | ஒவ்வொரு மாதமும் 3 ம் கிழமையில் 3 ம் நாள் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் மே, ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறும்.

5—463

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கு

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்ப வேண்டும். அரசாங்க அழுத்தகள் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்று கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. பி. ப. 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. பி. ப. 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. பி. ப. 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. பி. ப. 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. பி. ப. 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. ந. ப. 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி.
கொழும்பு.
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.